*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Issue DOI: https://doi.org/10.63300/tm07032026

# The Position of Women in the Social Structure of Alam Novel

**V. Pavithra [1*], Dr. J. Benny [2],**
[1]Research Scholar, Reg No: 241131501003, Tamil Research Centre, S.T. Hindu College, Nagercoil, Affiliated to Manonmaniam Sundaranar University, Abishekapatti, Tirunelveli, Tamil Nadu, India.

[2]Research Guide, Assistant Professor, Tamil Research Centre, S.T. Hindu College, Nagercoil, Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India.

*Correspondence: pavithra2001kp@gmail.com,

**Article Info**
Received on 22-Feb-2026, Revised on 25-Feb-2026, Accepted on 26-Feb-2026, Published on 01-Mar-2026

## ABSTRACT

*Feminism emerged as a philosophy to establish the rights of women, who hold as much significance in society as men. It is a movement that seeks to understand and resolve the various challenges faced by women. In a patriarchal society, women are often pressured to live in dependency on men. The novel Alam highlights how a woman's life is severely impacted in the absence of a husband. The story portrays the character Sundarambal, who leads her family independently despite being a widow. She sustains her livelihood by gathering natural forest produce for food and for sale. Furthermore, she takes full responsibility for her family—working in the salt pans (Uppalli and Alam) and arranging the marriages of her daughters. Her daughters—Vadivambal, Rasambal, and Anjambal—also strive to earn a living through their own labor in their father's absence. The novel underscores their tireless work, self-confidence, and resilience. The primary objective of this article is to analyze the feminist concepts embedded within Su. Tamilselvi's novel, Alam.*

***KEYWORDS:*** *Feminism, Sundarambal, Sexism, Salt pan, Widow Remarriage.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).
Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 03 (March -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

# அளம் நாவல் சுட்டும் சமூக கட்டமைப்பில் பெண்ணின் நிலை

[1]**வே. பவித்ரா,** முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்: 241131501003, தமிழ்க்கலை ஆய்வகம், தெ. தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது, அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.

[2]**முனைவர். ஜோ. பென்னி,** நெறியாளர், உதவிப்பேராசிரியர், தமிழ்க்கலை ஆய்வகம், தெ. தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பட்டுள்ளது, அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா..

**ஆய்வுச் சுருக்கம்**

சமூகத்தில் ஆணுக்கு நிகராக முக்கியத்துவம் பெற்றவர்களாக விளங்குகின்ற பெண்களினுடைய உரிமைகளை நிலைநாட்டும் வகையில் மலர்ந்த கோட்பாடாகப் பெண்ணியம் அமைந்துள்ளது. இது பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்து கொண்டு அவற்றைக் களைய முற்படும் இயக்கமாகும். ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்கள் ஆண்களைச் சார்ந்தே வாழ வலியுறுத்தப்படுகின்றனர். கணவன் இல்லாத நிலையில் பெண்ணின் வாழ்நிலை கடுமையாக பாதிக்கப்படுவதை அளம் நாவல் முன் வைக்கிறது. கணவன் இல்லாவிட்டாலும் தன் குடும்பத்தை சுந்தராம்பாள் தனித்து நின்று வழி நடத்துவதாக இந்நாவல் அமைகிறது. காடுகளில் இயற்கையாக கிடைக்கும் பொருள்களை உணவாகவும் விற்பனைக்கு கொண்டு சென்றும் தன் வாழ்வாதாரத்தை அவள் நிறைவு செய்கிறாள். அதுமட்டுமின்றி படு உப்பள்ளியும், அளத்தில் வேலை செய்தும், தன் மகள்களுக்கு திருமணம் செய்து வைத்து குடும்பத்தின் அனைத்து பொறுப்புகளிலும் ஈடுபடுகிறாள். அவளது மகள்களான வடிவம்பாள், ராசாம்பாள், அஞ்சம்பாள் ஆகியோரும் தந்தை இல்லாத நிலையில் தங்களால் இயன்ற வேலைகளைச் செய்து வாழ முற்படுகின்றனர். இவர்கள் தன்னம்பிக்கையுடனும், மனம் தளராமலும் அயராது உழைத்தமையை அளம் நாவல் சுட்டுகிறது. சு.தமிழ்ச்செல்வியின் அளம் நாவலில் இடம்பெற்றுள்ள பெண்ணியக் கருத்தாக்கங்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள்:** பெண்ணியம், சுந்தராம்பாள், பாலினப் பாகுபாடு, உப்பளம், விதவை மறுமணம்.

**முன்னுரை**

இலக்கியம் இன்றைய சமகாலச் சிந்தனையை பிரதிபலிப்பதுடன், தன்னுள் ஏதேனும் ஒரு செய்தியை உள்ளடக்கமாகக் கொண்டிருத்தல் அவசியமாகிறது. அவ்வகையில் சு.தமிழ்ச்செல்வியின் படைப்புகள் யாவும் கிராமப்புற மக்களின் வாழ்வியலை யதார்த்தமாக வெளிப்படுத்தும் தன்மைக் கொண்டது. இவருடைய கதாபாத்திரங்கள் பெரும்பாலும்



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

பெண்மையின் வலிமையையும், துணிச்சலையும் வெளிப்படுத்துகின்றன. பெண்களின் பிரச்சனைகள் மற்றும் அவர்களின் உணர்வுகள் அவரது எழுத்துக்களில் ஆழமாக பிரதிபலிக்கின்றன. அளம் நாவல் கணவன் தன்னை விட்டுச்சென்ற பின்னரும் மனம் தளராமல், கூலி வேலை செய்து உப்பளத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளும் சுந்தராம்பாளின் கடின உழைப்பையும், தன் மகள்களுக்கு நல்ல வாழ்க்கை சூழலை அமைத்து தரப் போராடுவதையும் மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. இந்நாவலை பெண்ணிய நோக்கில் ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**பெண்ணியம்**

'Feminism' என்னும் ஆங்கிலச் சொல் 'Femina' எனும் இலத்தீன் மொழியிலிருந்து உருவானதாகும். இதன் பொருள் பெண்மைக்குரிய இயல்புகளை உடையவள் என்பதாகும். இச்சொல் தமிழில் பெண்ணியம், பெண்ணிலைவாதம், பெண் நிலை ஏற்பு, மகளிரியல் ஆகிய சொற்களால் அழைக்கப்பட்டு வருகிறது. பெண்ணியம் என்பது பெண்களின் வாழ்க்கைநிலை, அவர்களுக்கான விழிப்புணர்வு, முன்னேற்றச் செயல்பாடுகள், அதில் ஏற்படும் தடைக்கற்கள், களையும் முனைப்புகள் அனைத்தையும் உள்ளடக்கியதாகும். பெண்ணியம் பற்றிய கருத்தாக்கங்களைப் பல அறிஞர்கள் தங்களின் பேச்சாலும் எழுத்துக்களாலும் வெளிப்படுத்தியுள்ளனர். கார்டன் என்ற அறிஞர் **"பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து அதனை மாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் பெண்ணியம்"** (பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப் பயன்பாடும், பக்.9) என்று விளக்கம் தருகிறார். மேலும், **"பிரான்சு நாட்டைச் சேர்ந்த சிமோன் டி பேவர் இரண்டாவது பாலினம் (The Second Sex:1949) என்ற நூலை எழுதினார். இந்த நூலை முன்னோடியாகக் கொண்டு, பெண்ணியம் ஓர் அறிவார்ந்த கொள்கையாகவும் போராட்டக் கருவியாகவும் முன்வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது"** (திறனாய்வுக்கலை, பக்.219) என்னும் கருத்தாடல் ஆண், பெண் சமத்துவத்தையும் முன்னேற்றத்தையும் வலியுறுத்துவதாக அமைகிறது.

**அளம் நாவலில் பெண்ணியம்**

அளம் நாவலின் வாயிலாக சு.தமிழ்ச்செல்வி பெண்களின் நிலையை அணு அணுவாகச் சுட்டிக்காட்டுகிறார். தனி ஆளாக ஒரு பெண் குடும்பத்தில் வரும் துன்பங்களை எவ்வாறு எதிர்கொள்கிறாள் என்பதை இந்நாவல் காட்சிப்படுத்துகின்றது. அளம் நாவலின் முதன்மைக் கதாபாத்திரமான சுந்தராம்பாள் கணவன் இல்லாத நிலையில், மூன்று பெண் பிள்ளைகளை வைத்துக் கொண்டு மிகவும் சிரமப்படுகிறாள். வேளாண்மை செய்ய எண்ணி நெல் விதைக்க,


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

விதைத்த நெல் அறுவடைக்கு தயாராக இருக்கும் நிலையில், ஐப்பசி மாத அடைமழையால் பயிரை வெள்ளம் அடித்துப் போனது. அடிமேல் அடி பட்டும் சோர்ந்து போகாமல், சுந்தராம்பாள் தன்னுடைய கடின உழைப்பால் அயராது கூலி வேலை செய்து பின் சொந்தமாக ஓர் அளத்தை வாங்கி வேலை செய்யும் அளவுக்கு வளர்ச்சியை எட்டுகிறாள். இத்தகைய பெண் முன்னேற்றம் பற்றி இந்நாவல் பதிவு செய்கிறது. பெண்ணியம் என்பது மிதவாதப்பெண்ணியம், தீவிரவாதப் பெண்ணியம், கலாச்சாரப் பெண்ணியம், சூழல் பெண்ணியம் என பல வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தாலும், அளம் நாவலில் மிதவாதப் பெண்ணியம் பற்றிய கருத்துக்களையே மிகுதியாகக் காண முடிகிறது. **"மிதவாதப் பெண்ணியம் பகுத்தறிவின் அடிப்படையில் அமைந்தது. கடவுளுக்கு முன் எல்லா மனிதரும் சமம் என்ற முறையில் ஆண் - பெண் சமத்துவத்தை வழியுறுத்தியது. இது குடும்ப அமைப்பு, திருமணம், குழந்தைப்பேறு ஆகியவற்றை போற்றியது. இவற்றிலும் பெண்ணுரிமைச் சமத்துவத்தை வலியுறுத்துகிறது"** (பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப் பயன்பாடும், பக்.25). சம ஊதியம், சம வேலைவாய்ப்பு போன்றவற்றை வலியுறுத்துவதாக மிதவாதப் பெண்ணியம் அமைகிறது.

**கணவன் மனைவி உறவுநிலை**

பெண் சித்தரிப்புகளில் மாற்றங்களை மேற்கொண்டு எழுதி வருகின்ற பெண் எழுத்தாளர்களில் ஒருவராக படைப்பாசிரியர் சு.தமிழ்ச்செல்வி திகழ்கிறார். அளம் நாவலில் திருமணம், பிள்ளைப்பேறு போன்ற வழக்கமான நடைமுறைக்குள் இருந்தே ஆண் துணையற்று தம்மை தற்காத்துக் கொண்டும், தன் பிள்ளைகளை வளர்த்தும் வருவதாய் சுந்தரம்பாள் என்ற பாத்திரத்தைப் படைத்திருக்கிறார் ஆசிரியர். சங்க காலத்திலிருந்து பொருள்வயின் பிரிந்து செல்லும் கணவனைத் தன்னோடு இருக்குமாறு வலியுறுத்தும் நிலை காணப்படுகிறது. அளம் நாவலில் கணவன் சுப்பையன் எந்த வேலைக்கும் போகாமல் வெட்டியாய் ஊரைச் சுற்றிக் கொண்டு இருப்பவனாக இருந்தாலும் கூட, அவன் கப்பலுக்கு வேலைக்குப் போவதை நினைத்து சுந்தரம்பாள் வருத்தப்படுவதாக அமைவதை,

"என்னதான் பேசினாலும் சண்டை போட்டாலும் அவனைக் கப்பலுக்கு அனுப்பி விட்டு தனியாயிருக்க அவளுக்கு கவலையாகவேயிருந்தது. சுப்பையன் கப்பலேறிவிட்டால், இப்போது படுவது போல் சாப்பாட்டுக்கும் துணிமணிக்கும் கஷ்டப்படாமல் வசதியாய் வாழலாம். சொந்தக்காரர்கள் எல்லாம் கப்பக்காரன் பொண்டாட்டி என்று மரியாதையோடு பார்ப்பார்கள். இருந்தாலும் நான்கைந்து வருடங்கள் அவனைப் பார்க்காமல் எப்படி பிரிந்திருப்பது என்று நினைத்து வருத்தப்பட்டாள்." (அளம், பக்.13)


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

என்று குறிப்பதன் மூலம் சுந்தரம்பாளின் மனநிலையை அறியமுடிகிறது. ஆனால் சுப்பையன் போன பின்னால் தன் பிள்ளைகளைக் கூலி வேலைக்குச் சென்று வளர்க்கும் நிலை ஏற்படுகிறது. இவர்களின் குழந்தைகள் மூவரும் பெரிய மனுஷியாகி விட்டார்கள். ஆனாலும் அவன் இதுவரை வரவே இல்லை என்று சுந்தராம்பாள் புலம்புவதை அளம் நாவல் சுட்டிக்காட்டுகிறது. குடும்பம் என்றாலே பொதுவாக கணவன் மனைவி உறவுநிலை மிகவும் நெருக்கமானதாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. இருவரும் ஒருவருக்கொருவர் மிகுந்த அன்பும், பாசமும், அரவணைப்பும் கொண்டு குடும்பத்தில் வாழ வேண்டும் என்பதை,

**"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது."** **(குறள்: 45)**

என்ற வள்ளுவரின் குறளால் அறியலாம். சுந்தராம்பாள் தன் கணவன் தன்னை விட்டுப் போன பின்பும் கூட, என்றாவது ஒருநாள் மீண்டும் வீடு திரும்புவான் என்ற நம்பிக்கையுடன் அவனைக் நினைத்துக் கொண்டே வாழ்கிறாள். தன் ஊரில் புயல் வந்து வீடுகளை அடித்துக் கொண்டு போகும் நிலையிலும் கூட, இவள் தன் சொந்த ஊரைவிட்டுப் புலம்பெயராமல் இருந்தாள் என்பதனையும் இந்நாவல் சுட்டிக் காட்டுகிறது.

**தந்தை இல்லாக் குடும்பத்தின் நிலை**

ஆண் துணையில்லாத குடும்பங்களில் பெண்கள், தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், சமூகத்தில் மரியாதையுடன் வாழவும் குழந்தைகளின் எதிர்காலத்தை பாதுகாப்பாக அமைக்கவும் போராட வேண்டிய நிலையுள்ளது. அளம் நாவலில் வேலைக்காக சிங்கப்பூர் சென்ற கணவன் சுப்பையன் வீடு திரும்பவில்லை. இதனால் இவர்களது குடும்பம் மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்படுகிறது. தன் கணவனுக்கு ஏதேனும் நடந்து விட்டதோ என்று சுந்தராம்பாள் எண்ணி தினந்தோறும் வேதனைப்படுகிறாள். அதுமட்டுமின்றி தனி ஆளாய் நின்று மூன்று பெண் பிள்ளைகளையும் எப்படி கரையேற்றப் போகிறேன் என்ற கவலையும் அவளை வாட்டுகிறது. இந்நிலையில் தனது இரண்டாவது பெண்ணான ராசாம்பாள் வயதுக்கு வந்த செய்தியை கேட்டதும் சுந்தரம்பாளின் முகம் வாடுகிறது. மூத்த மகளுக்கே இன்னும் திருமணம் நடத்தவில்லையே, இப்போ ராசாம்பாளுக்கும் திருமணம் பண்ணி வைக்கணுமே என்ற காரணத்தை எண்ணி அவள் வேதனைப்படுகிறாள். அவளுடைய தந்தை மட்டும் இருந்திருந்தால், திருமண வயது வந்த உடனேயே அவளுக்கு மணம் செய்து வைத்திருப்பாரே என்று சுப்பையனை நினைத்துக் கண் கலங்கிய சுந்தராம்பாள்,

"நீ வயசிக்கி வந்தே நாலு வருசமாவுது. இன்னமும் ஒன்ன ஒரு எடத்துல புடிச்சிக்குடுக்க


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

முடியாம மங்கவச்சி மருவுறங். இதுல அவவேற வந்துட்டாளேன்னு நெனச்சா யாங் ஆவியே அடங்கிடும் பொலருக்கு பெரியங்கச்சி." (அளம், பக்.59)

என்றும்,

"ஒங்கப்பாரு இப்புடி பண்ணிப்புட்டு பெயிட்டாவொளே. பொம்புளயா இருந்துட்டு என்னால ஒழைக்க முடிஞ்சிச்சி. செருமப்பட முடிஞ்சிச்சி. ஒங்கள வளத்து ஆளாக்க முடிஞ்சிச்சி. ஊருசனம் பாத்து ஒரு சொல்ல சொல்லுறத்துக்குள்ள ஒன்ன கரயேத்த முடியலையே." (அளம், பக்.60)

என்றும் மகளிடம் அழுது புலம்புவதை நாவலின் வழி காண முடிகிறது.

**சுந்தராம்பாளின் தன்னூக்கம்**

அளம் நாவலின் முதன்மைப் பத்திரமாக விளங்கும் சுந்தரம்பாள், தனி ஆளாய் நின்று குடும்பப் பொறுப்புகளை ஏற்று செயல்படுகிறாள். இவள் வாழ்க்கைப் பாதையில் வரும் இடையூறுகளை எதிர்கொள்ளும் தன்னூக்கமிக்கவளாய் காணப்படுகிறாள். மூத்த மகளான வடிவம்பாளுக்கு திருமணம் செய்து கொடுப்பதற்குள் பல இடர்பாடுகளை சுந்தரம்பாள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. கருப்பாக இருப்பதால் யாரும் கட்டிக் கொள்ள முன்வரவில்லை என்ற வருத்தம் இருந்தாலும், மகளுக்கு நாக தோசம் இருப்பதாக கூறிய சோதிடர், தோசத்தைக் கழிக்கக் கடலுக்குச் சென்று முழுக வேண்டும் என்ற பரிகாரத்தையும் கூறுகிறார். இதனைக் கேட்டதிலிருந்து சுந்தரம்பாளின் மனம் அலை மோதியது. உடனே வடிவம்பாளை அழைத்துக் கொண்டு பரிகாரம் செய்ய கிளம்புகிறாள் என்பதை,

"பெரியங்கச்சி நாளக்கி கருக்கல்லயும் கெளம்பிடுவம். தெக்கக் கோடியக்கர கடலுல போயி முளுவிப்புட்டு அப்புடியே வேதாரணியம் கோயிலுக்கு வந்து துக்கையம்மனுக்கு ஒரு அரிச்சின பண்ணிக்கிட்டு வந்துடுவம்" (அளம், பக்.71)

என்ற வரிகள் மூலம் அறியலாம். வாழ்க்கைச் சூழல் எவ்வளவு கடினமாக இருந்தாலும், மகளுக்கு செய்ய வேண்டிய கடமைகளிலிருந்து தவறக்கூடாது என்று எண்ணும் தாயின் நிலை இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும், **"இந்த முழுக்குக்குப் பிறகு எப்படியும் வடிவம்பாளுக்கு நல்லதொரு வழி பிறந்து விடும் என்று நினைத்தாள் அவள்"** (அளம், பக்.80) என்ற வரியானது இவர்கள் சோதிடத்தின் மேல் வைத்திருந்த நம்பிக்கையினை எடுத்துக் காட்டுகிறது.

வறுமை என்ற நிலையிலிருந்து தப்பி வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்று எண்ணத்தோடு வாழும் சுந்தரம்பாளும் அவளுடைய பிள்ளைகளும் தன்னம்பிக்கை உடையவர்களாக காணப்படுகிறார்கள். கூலி வேலைக்குச் சென்று அன்றாட வாழ்க்கை நடத்தி


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 03 (March -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

வரும் சுந்தரம்பாளிடம் மகள் வடிவம்பாள் தங்களுடைய நிலத்தில் விவசாயம் செய்து சொந்த காலில் நிற்க வேண்டும் என்ற யோசனையை கூறுகிறாள். அதன்படி வீட்டைச் சுற்றியிருந்த நிலத்தில் தாயும் மகள்களும் சேர்ந்து உழுது 'வெள்ளைக் கொடவால' நெல்லையும், 'கருப்பு நெல்'லையும் விதைக்கின்றனர். அப்பயிர்கள் நன்கு செழிப்புற்று வளர்ந்த நிலையை ஆசிரியர், **"நிரைமாத கர்ப்பிணியாயிருக்கும் பெண்ணின் வயிற்றைப் போல உப்பியிருந்தது கதிர்தோகை"** (அளம், பக்.84) என்று நாவலில் வர்ணிக்கிறார். ஆனால் 'நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்' என்பது போல, கதிர் அறுவடைக்கு முன் வந்த ஐப்பசி மாத அடைமழையால் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி வீணானது மட்டுமல்லாமல் மண் சுவர் கொண்ட இவர்களது கூரை வீடும் புயல் காற்றாலும் மழையாலும் சேதமடைந்தது. சுந்தரம்பாளும் அவளது பிள்ளைகளும் கொண்டிருந்த நம்பிக்கை வெள்ளத்தால் அடித்துக் கொண்டு போனது போலாயிற்று என்ற செய்தியினை,

"கடவுளே. ஆவுத்திக்காத்தா. சின்னஞ்செறுசுவொள வச்சிக்கிட்டு எங்கப்போவங். எங்களக்காப்பாத்து. இந்த வூடு வுளுந்துடக்கொடாது ஆவுத்திக்காத்தா." சுந்தராம்பாள் வேண்டிக் கொண்டிருக்கும் போதே வீடு அப்படியே தரையில் இறங்கி உட்கார்ந்துவிட்டது. (அளம், பக்.89)

என்ற வரிகள் உணர்த்துகின்றன. இத்தகைய இன்னல்களிலும் மனந்தளராமல் தன் பிள்ளைகளோடு அடுத்து என்ன செய்வது என்று எண்ணினாள் சுந்தராம்பாள். இவ்வாறு கடின உழைப்பை மட்டுமே நம்பி மன உறுதியுடன் தனித்து வாழும் பெண்களின் வாழ்க்கைப் போராட்டத்தினை இந்நாவல் மிக அழகாகக் காட்சிப்படுத்துகிறது.

**உப்பளத் தொழில்**

சு.தமிழ்ச்செல்வியின் நாவல்களில் நெய்தல் நில மக்களின் தொழிலான மீன் பிடித்தலும், உப்பளத் தொழிலும் பிரதானமாகப் பேசப்படுகின்றன. கடல் பகுதியில் வாழும் மக்கள் உப்பளங்களில் வேலை செய்து, அதில் வரும் பொருளாதாரத்தையே மூலமாகக் கொண்டு வாழ்க்கை நடத்தினர் என்பதை அளம் நாவல் மூலம் ஆசிரியர் குறிப்பிட்டுக் காட்டுகிறார். இயற்கைப் பேரிடரினால் கோவில்தாழ்வு பகுதி மக்களின் வாழ்வாதாரமாக இருந்த பயிர் சாகுபடி பாதிக்கப்பட்டதால், கூலி வேலைக்குக் கூட போக வழியின்றி மக்கள் வறுமையில் வாடினர். இதனால் ஆண்கள் பெரும்பாலானோர் அளத்துக்கு வேலைக்குச் சென்றனர் என்பதை ஆசிரியர் நாவலின் வாயிலாக சுட்டிக்காட்டியுள்ளார். உப்பு தயாரிக்கும் களத்தினை உப்பளம், அளம், கழிநிலம், கோவளம் என்றெல்லாம் குறிப்பிடலாம். கோவில்தாழ்வு பகுதியில் அமைந்துள்ள உப்பளத்துக்கு ஊர் மக்கள் அனைவரும் வேலைக்குச் சென்றனர். ஆனால், சுந்தரம்பாளுக்கு


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

உப்பள வேலையில் பெரிதாக ஈடுபாடு இல்லை. முதலில் சரியான பராமரிப்பின்றி கிடந்த அளத்திலிருந்து உப்பை அள்ளிக் கொண்டு போய் விற்றுக் கிடைக்கின்ற வருமானத்தை வைத்து குடும்பத்தைச் சமாளித்தனர். இதனை,

"உப்பள்ளி கரயேத்தி வச்சாச்சி. இதக்கொண்டபோயி எங்குட்டாவுது குடுத்துட்டு வந்தாத்தான் சோறு தண்ணின்னு எதயாவது கண்ணால பாக்கலாம்" (அளம், பக்.170)

என்ற நாவல் வரிகள் மூலம் அறிய முடிகிறது. உப்பள வேலையில் உடம்பில் சூடேறும்; கால்களில் புண் ஏற்பட்டு ஆறாது. ஆனால் பிழைப்பிற்கு வேறு வழியில்லாததால் மகள்கள் வடிவம்பாளும் அஞ்சம்பாளும் உப்பள வேலைக்குப் போக வேண்டுமென்று கூறுகின்றனர். நாளுக்குநாள் குடும்பத்தில் சொல்ல முடியாத அளவுக்கு வறுமை நீடித்துக் கொண்டிருந்த நிலையில், உண்ண உணவின்றி மக்கள் தவித்தனர். அதன் விளைவாகக் கீரையைச் சமைத்தும், புளியங்கொட்டையை வறுத்தும், கொட்டிக் கிழங்கு, பனங்கிழங்கு, பனம்பழம் போன்றவற்றையும் மக்கள் உண்டனர் என்பதனை,

"ஊரில் ஆடுமாடுகள் இல்லை. நெல்லு நீரு விளையவில்லை. பனங்கிழங்கும் கிடைக்காமல் போய்விட்டது. மின்னிக் கிழங்கும், கொட்டிக் கிழங்கும், காரக்கொட்டிக் கிழங்கும் தான் சனங்களுக்கு உணவாக இருந்து உயிர்காத்தது. இந்த கிழங்குகளுக்காகக்கூட சனங்கள் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டார்கள். கொல்லைகளில் கீரைகள் துளிர்விடும்போதே 'பலகீரை' ஆய்ந்துவந்து கடைந்து தின்றார்கள்."

"வெள்ளம் தேங்கி நின்ற பகுதிகள் என்பதாலோ என்னவோ முளைத்தவைகள் எல்லாம் தளதளவென்று வளர்ந்தது. கொடிகளில் கிடந்த கீரைகளும் உணவாகியது. கொம்மட்டிதான் பிஞ்சிலிருந்து பழம்வரை எல்லோருக்கும் முக்கிய உணவாக இருந்தது." (அளம், பக்.166)

என்ற நாவல் வரிகள் மூலம் அறியலாம்.

உப்பளத்தில் வேலை செய்வது மற்ற வேலைகளைப் போலச் சுலபமானதல்ல. சுட்டெரிக்கும் வெயிலில் நிற்க வேண்டும். உப்பு தரையானது உருக்கி ஊற்றிய ஈயம் போல சுடும் என்பதை,

"எவ்வளவு சிவப்புநிற உடம்பாயிருந்தாலும் ஒரே நாளில் பனங்காய் கருப்புபோல் நிறம்மாறிவிடும். உடம்பும் எவ்வளவு தின்றாலும் தேறாது. கருவாடுபோட்ட மீனைப் போல வத்தலாகிவிடும். கைகளிலும் கால்களிலும் உப்புவெட்டி புண்ணாகிவிடும். உப்புவெட்டிய காயத்தில் உப்புத் தண்ணீர் பட்டு எரிந்து கொண்டேயிருக்கும். உப்புக் காயம் லேசில் ஆறாது. கசிந்து கொண்டேயிருக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக இரவென்றும் பகலென்றும் பார்க்காமல்



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 03 (March -2026)*
[www.tamilmanam.in](http://www.tamilmanam.in) *DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

கண் விழித்து வேலை செய்ய வேண்டும்." (அளம், பக்.66)

என்ற நாவல் கூற்றால் உணரலாம். இதன் மூலம் உப்பளத்திற்குப் போவதில் உள்ள சிரமங்களை அறிந்து கொள்ளலாம். அதுமட்டுமன்றி. வேளாண் தொழிலை விட அளத்தில் வேலை செய்வது உடலுக்கு மிகுந்த பாதிப்பைக் கொடுக்கும் என்பதையும் உணர முடிகிறது.

**பாலினப் பாகுபாடு**

பாலினப் பாகுபாடு என்பது நமது சமூகத்தின் ஒரு சோகமான உண்மை. இது ஆண் மற்றும் பெண்ணிற்கிடையே உள்ள வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுவதாய் உள்ளது. இப்பாகுபாடு சமூக, பொருளாதார, மற்றும் உடல் ரீதியான அடிப்படையில் இருக்கலாம். சு. தமிழ்ச்செல்வி அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள கோடியக்காடு, வேதாரண்யம் போன்ற கடலோர கிராமங்களில் வாழும் மக்களின் நீர் மேலாண்மையாக உப்பு உற்பத்தி விளங்குகின்றது என்பதை அளம் நாவல் மூலம் சுட்டிக்காட்டுகிறார். இந்நாவல் கோவில்தாழ்வு என்ற பகுதியைச் சேர்ந்த மக்களின் வாழ்வியலைச் சுட்டுகிறது. இது கடைமடைப் பகுதியாக இருந்தபோதிலும், எழுபதுகளில் இப்பகுதியில் வேளாண்மை செழிப்பாக இருந்துள்ளது; குறிப்பாக மழைக் காலங்களில் நெல் சாகுபடி மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது. ஆனால், காலப்போக்கில் இப்பகுதி வறட்சியின் பிடியில் சிக்கியது. இத்தகைய வாழ்வாதார நெருக்கடிக்கு நடுவே, பெண்கள் குடும்ப அமைப்பிற்குள் தந்தை, கணவர் மற்றும் உறவினர்களால் ஒடுக்குமுறைக்கும் பாதிப்புகளுக்கும் உள்ளாகியுள்ளனர். எனினும், இத்தனை சமூக மற்றும் பொருளாதார நெருக்கடிகளையும் மீறி, அவர்கள் இரும்பைப் போன்ற மன உறுதியுடன் உழைத்தனர். விவசாயம் செழித்த போது களை பறிப்பதிலும், நாற்று நடுவதிலும் ஈடுபட்ட அதே கரங்கள், வறட்சி வந்தபோது பிழைப்பிற்காகக் கருவேல முள் வெட்டும் கடினமான வேலைகளையும் தயக்கமின்றி மேற்கொண்டனர். இவர்களது அயராத உழைப்பே அந்த நிலத்தின் வறட்சிக்கு நடுவிலும் வாழ்வை உயிர்ப்புடன் வைத்திருந்தது எனலாம். இயற்கைப் பேரிடர்களால் வேளாண்மை இன்றி, மக்கள் ஏழ்மையில் வாடியபோது, அவர்களுக்குக் கைகொடுத்தது கோவில்தாழ்வு பகுதியில் நிறுவப்பட்ட 'வின்கோ' எனும் உப்பு நிறுவனம் தான். விவசாயத்தை இழந்த அந்த எளிய மக்களுக்கு, மேலைநாட்டினரால் தொடங்கப்பட்ட அந்த நிறுவனத்தின் உப்பு உற்பத்திப் பணிகளே முதன்மையான வாழ்வாதாரமாக மாறின. வேளாண்மை பொய்த்துப் போனதால் ஆண்கள் பெரும்பாலானவர்கள் அளத்திற்கு வேலைக்குப் போனார்கள். கோவில்தாழ்வு பெண்கள் அளத்து வேலைக்கெல்லாம் போகமாட்டார்கள் என்ற மரபு பழக்கம் மக்களிடையே இருந்ததை ஆசிரியர் நாவல் வழியாகச் சுட்டிக்காட்டுகிறார். இருப்பினும், குடும்பச் சூழல் காரணமாக உப்பளத்தில் ஆண்களோடு பெண்களும் சேர்ந்து உப்பள்ளும் வேலைகளைப் பார்த்தனர். உப்பளம் அமைக்கும் பணிகளான



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

கரைக் கட்டுதல், வாய்க்கால் வெட்டுதல் போன்ற கடின உழைப்பு கோரும் வேலைகளில் பெண்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது; இது அங்கு நிலவிய பாலினப் பாகுபாட்டைப் பறைசாற்றுகிறது. ஆனால், வறுமை வாட்டிய போதும் கூட, சுந்தராம்பாள் ஆரம்பத்தில் உப்பளப் பணிகளில் ஈடுபட முன்வரவில்லை. சுந்தராம்பாளின் இளைய மகள் அஞ்சம்பாள், தன் தாய் படும் துயரங்களைக் கண்டு வேதனை அடைந்தாள். தாயுடன் இணைந்து பொது இடங்களில் விளைந்த உப்பைச் சேகரித்து, அதனைப் பல ஊர்களுக்குச் சென்று பண்டமாற்றாக விற்று, ஈட்டிய அரிசியைக் கொண்டே அவர்கள் பசியாறினர். குடும்பத்தின் வறுமைச் சுமையைத் தாங்கிக் கொண்டிருக்கும் தாய்க்கு எப்படியாவது உதவ வேண்டும் என்ற துடிப்பு அஞ்சம்பாளை ஒரு துணிச்சலான முடிவை எடுக்கத் தூண்டியது. சமூகக் கட்டுப்பாடுகளை உடைக்க அவள் தன்னை ஒரு சிறுவனாக மாற்றிக்கொண்டாள். தன் நண்பன் பூச்சியின் கிழிந்த சட்டையை அணிந்து கொண்டு, ஆண் வேடத்தில் அஞ்சம்பாள் உப்பளத்திற்குச் சென்று மண்சுமக்கும் கடினப் பணியை மேற்கொண்டாள். வறுமையின் பிடியிலிருந்து தன் குடும்பத்தைக் காக்க ஒரு பெண் எடுத்த இந்த உருமாற்றம், அந்த நிலத்தின் அவலத்தையும் பெண்ணின் அசாத்தியமான உழைப்பையும் ஒருசேரக் காட்டுகிறது. இச்செய்தியினை,

"பூச்சி... பூச்சி... நானும் வாறம்பூச்சி... என்னயும் அழச்சிக்கிட்டுப் போ பூச்சி."

"அதாஞ் சொல்லுறனே. நாங்க ஆம்புளப் புள்ளைவொளாத் தாஞ் செய்யிறோம். ஒன்ன சேத்துக்கிட மாட்டாவொன்னு." (அளம், பக்.122)

என்ற நாவல் வரிகள் குறிப்பிடுகின்றன.

நந்தன வருசத்தின் புயலுக்குப் பிறகு கடற்கரையைச் சார்ந்த மக்கள் உப்பளத்தையே நம்பி வாழ்ந்தார்கள். வேளாண்மை கை கொடுக்காததால் உப்பளமே பெரும்பாலான மக்களுக்கு உணவுக்கு வகை செய்தது. இப்பகுதியில் பொதுவாகக் கிடந்த புறம்போக்கு நிலத்தில் உப்பளம் அமைக்க ஊர் மக்கள் சேர்ந்து ஆளுக்கு ஒரு ஏக்கர் எனப் பிரித்துக் கொள்ள முடிவு செய்தார்கள். ஆனால் யாரும் சுந்தரம்பாளிடம் இது பற்றிக் கூறவில்லை. ஏனெனில் அவள் வீட்டில் ஆண் பிள்ளையோ அல்லது கணவனோ இல்லை என்பதே காரணம் என்பதை,

"ஒன்னகிட்ட எப்புடி சொல்லுவாவோ? ஆம்புள புள்ளய பெத்திருக்கணும். இல்லாட்டி ஆம்புடயானாவுது வூட்டுல இருக்கணும். ஒனக்குத்தான் எதுவுமே இல்லையே எப்புடி சொல்லுவாவோ." (அளம், பக். 212)

என்ற வரிகளால் மூலம் அறியமுடிகிறது. இதையே காரணமாக வைத்து சுந்தரம்பாளின் குடும்பத்திற்கு மட்டும் பங்குக் கொடுக்கவில்லை என்பதையும் நாவல் சுட்டிக்காட்டுகிறது. இந்தக் காரணத்தினால் ஒதுக்கப்பட்டாலும் பின் வாங்காது உடல்நலக் குறைவினால் உப்பளத்தைப்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

பராமரிக்க இயலாத முதியவர் ஒருவரிடமிருந்து அளத்தைக் குத்தகைக்கு எடுத்து, தாயும் மகள்களும் ஒன்றிணைந்து உப்பை விளைவித்ததை 'அளம்' நாவல் மிக அழுத்தமாகப் பதிவு செய்கிறது.

**விதவை மறுமணம்**

சுந்தரம்பாளின் மூத்த மகள் வடிவம்பாளுக்கு இருபத்தி மூன்று வயதில் பொன்னையன் என்பவனுடன் திருமணம் நடைபெறுகிறது. வசதி வாய்ப்பு நிறைய இருந்தாலும், வடிவம்பாளை விட அதிக வயதுடையவர் அவளது கணவர். திருமணத்திற்குப் பின் வடிவம்பாள் மகிழ்ச்சியோடு தான் இருந்தாள். ஆனால் திருமணமான சில நாளிலேயே தோப்பில் படுத்து உறங்கிக் கொண்டிருந்த அவளது கணவர் பொன்னையனின் தலைமீது தேங்காய் விழுந்து, நினைவிழந்துக் கிடந்தான். இதைக் கண்ட வடிவம்பாள் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுதுப் புலம்பினாள். அவனது உயிர் மட்டும் இழுத்துக் கொண்டு கிடந்தது. இச்செய்தியினை,

"பொன்னையன் இனிமே தேறமாட்டான்."

"பாவம் கப்பலுக்குப் போயி, பொன்னத்தேடி, பொருளத்தேடி, மண்ணத்தேடி, மனயத்தேடி வாளுற நேரத்துல எமன் வந்து எதுக்க நிக்கிறானே" என்றனர் சிலர். (அளம், பக்.196)

என்ற நாவல் வரிகள் புலப்படுத்துகின்றன. வடிவம்பாளின் வேண்டுதல் எதுவும் கடவுளின் காதுகளுக்கு எட்டவில்லை, பொன்னையன் இறந்து விட்டான். இவள் வந்த நேரம் தான் இப்படி ஆகிவிட்டது என்று பழிக் கூறி நாத்தனார்கள் பொன்னையன் செத்த பதினோராம் நாளே வடிவம்பாளை விரட்டி விட்டனர். இதனை,

"இனிமே இந்த வூட்டுக்கும் ஒனக்கும் எந்த சம்மந்தமும் இல்ல. எல்லாம் இன்னயோட ரத்தாயிட்டு" என்று சொல்லி கட்டியிருந்த துணியோடு விரட்டிவிட்டார்கள். என்ற வரிகள் மூலம் ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார்.

ஆண் சமுதாயத்தில் மனைவி இறந்து விட்டால் கிழவன் கூட மறுமணம் செய்து கொள்கிறான். ஆனால் கணவனை இழந்த இளம் பெண்ணுக்கு மறுமணம் செய்து கொள்ள இச்சமூகம் மறுப்பதை எண்ணி வேதனைப்படுவதை கவிஞர் வைரமுத்து,

**"ஒரு விதவைக் கூந்தலின்**
**பூக்களை மட்டுமே**
**புறக்கணிக்க முடியும்."**

**(திருத்தி எழுதிய தீர்ப்புகள், பக்.62)**

என்ற கவிதை வரிகளில் சுட்டுவதோடு, கைம்பெண்ணின் துன்பத்தையும் இந்த சமுதாயத்தின் அறியாமையும் சாடுகிறார். விதவைக் கோலத்தோடு வடிவம்பாள் அம்மா வீட்டிற்கு வந்துவிட்டாள்.


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

வீட்டை விட்டு எங்கும் செல்லாமல் வீட்டினுள்ளேயே கிடந்தாள். இப்படியே கொஞ்ச நாட்கள் ஓடின. ஒருநாள் ஆதனூரிலிருந்து வேலாயுதம் என்பவர் முத்துசாமி என்பவருக்கு வடிவம்பாளை இரண்டாம் தாரமாகக் கேட்டார். இதைக் கேட்ட வடிவம்பாளின் பெரியப்பா கணேசனுக்கு கொஞ்சம் அதிர்ச்சியாகவே இருந்தது. செய்வதறியாது திகைத்து நின்றார்.

"அவம்பொண்டாட்டிதான். அத இல்லன்னு யாரு சொன்னா? ஆனா அவஞ் செத்த பெறவும் பொன்னய்யம் பொண்டாட்டித் தான்னு கடசி வரய்க்கிம் சொல்லிக் கிட்டுருக்குறத்தால என்ன புண்ணியம்?" என்றார்.

"என்ன ஓய் சனம் சொல்லுறது? சொல்லுறத்துக்கு என்னருக்கு இதுல. அப்படியே சொன்னாலுங்கொட நெஞ்சுக்குழில ஈரமில்லாத சனம் சொல்லுதுன்னு வுட்டுட்டுப் போவ வேண்டியாங். அதுக்காவ நம்ம பொண்ணு வாழ்க்கய வீணடிக்கலாமா?" (அளம், பக்.235)

என்ற உரையாடல் மூலம் வேலாயுதம் விதவை மறுமணத்தை வலியுறுத்துவதை அறிய முடிகிறது. இறுதியில் வடிவம்பாள் முத்துசாமியை திருமணம் செய்து கொள்ள ஒத்துக்கொள்வதாக இந்நாவலில் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

**முடிவுரை**

காலங்காலமாக அன்பு, அடக்கம், பொறுமை, தியாகம், அறியாமை, மென்மை என்ற இயல்புகளால் பெண்ணின் திறமைகளைக் கட்டமைத்துள்ள சமூக அமைப்பில், விடுதலைப் போராட்ட காலத்திலிருந்து தற்போதைய காலம் வரை பெண்ணியக் கட்டமைப்புகளும் கட்டுடைப்புகளும் தொடர்ந்து கொண்டே தான் இருக்கின்றன. அவ்வகையில் சு.தமிழ்ச்செல்வியின் அளம் நாவலில் பெண்ணிய கட்டுடைப்பாக விதவை மறுமணம் அமைந்துள்ளது. இந்நாவலில் பெண்கள் அளத்து வேலைக்குச் செல்ல மாட்டார்கள் என்பதை உற்று நோக்கும்போது பாலினப் பாகுபாட்டை உணரலாம். இந்நிலை மாற்றப்படுதல் வேண்டும். பெண்களுக்கு வேலைவாய்ப்புகளில் சம வாய்ப்பும் உரிமையும் வழங்கப்பட வேண்டும். அளம் நாவலில் தமிழ்ச்செல்வி சுந்தராம்பாளையும் அவளது மகள்களையும் தன்னூக்கம் உடையவர்களாக சித்தரித்துள்ளார். கணவன் இல்லாத நிலையில் தன் குடும்பத்தைத் தானே வழிநடத்தும் திறமை கொண்டவளாக விளங்கும் சுந்தரம்பாளின் வாழ்வில் எதிர்கொள்ளும் சிக்கல்களில் வெற்றியடைபவளாக காணப்படுகிறாள். ஆணாதிக்கச் சிந்தனைகளை வேரறுத்து, பெண்கள் மீதான மரியாதையையும் சமத்துவத்தையும் வளர்க்கும் விதமாக சமூக விழிப்புணர்வு பிரச்சாரங்களை முன்னெடுக்க வேண்டும். குடும்பம், கல்வி நிறுவனங்கள் மற்றும் ஊடகங்கள் இந்த மாற்றத்தில் முக்கிய பங்கு வகிக்க வேண்டும். இந்த நாவலின் மூலம் நாம் பெறும் படிப்பினைகளை

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.08*

நடைமுறைப்படுத்தி, பெண்ணுரிமைக்காகவும், பாலின சமத்துவத்துக்காகவும் தொடர்ந்து போராடுவதன் மூலம் அளம் நாவல் எழுப்பிய வினாக்களுக்கு நாம் அர்த்தமுள்ள தீர்வுகளைக் காண முடியும்.

**துணைநூற் பட்டியல்**

1. கவிப்பேரரசு வைரமுத்து, திருத்தி எழுதிய தீர்ப்புகள், திருமகள் நிலையம், 2010.
2. தமிழ்ச்செல்வி. சு., அளம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2019.
3. நடராசன். தி. சு., திறனாய்வுக்கலை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, பக். 219, 2008.
4. ரெங்கம்மாள். இரா., & வாசுகி. சி., பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப் பயன்பாடும், அறிவுப் பதிப்பகம், சென்னை, பக். 9,25, 2006.
5. வரதராசனார். மு., திருக்குறள் தெளிவுரை, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1994.

**References:**

[1]. **Natarajan, T. S.** *Thiranayvukkalai*. New Century Book House, 2008.
[2]. **Rengammal, I., and C. Vasuki.** *Penniyam Anugumuraigalum Ilakkiya Payanpadum*. Arivu Pathippagam, 2006.
[3]. **Tamilselvi, S.** *Alam*. New Century Book House, 2019.
[4]. **Vairamuthu.** *Thiruthi Ezhuthiya Theerpugal*. Thirumagal Nilayam, 2010.
[5]. **Varatharasanar, Mu.** *Thirukkural Thelivurai*. South India Saiva Siddhanta Works Publishing Society, 1994.

*Copyright © 2026 Tamilmanam International Research Journal of Tamil Studies, All rights reserved.*